முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதைத்தான் நான் இப்போது நினைவுபடுத்துகிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அவர் சொல்லியிருக்கிற, அறிவித்து இருக்கிற அந்தத் திட்டத்தைத் தாங்கள் நிறைவேற்றித் தர முன்வருவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகப் பெரிய உள்ளம். அவர்களுடைய பெரிய உள்ளத்திற்கு அவர்கள் எவ்வளவோ பெரிய அறிவிப்புகளையெல்லாம் அறிவித்து இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அவர்களுடைய வாரிசாக இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். அந்த வரிசைப்படி எது முக்கியத்துவமோ, அந்த வரிசையில் இதுவும் வரும்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரிசைப்படி வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

வினா எண் 24— டாக்டர் மு. காளிராஜன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

24—

சிறப்பு மேற்படிப்பு படித்த மருத்துவர்களுக்கு பதவி உயர்வு.

*9672—டாக்டர் மு. காளிராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறப்பு மேற்படிப்பு (Specialities) படித்த மருத்துவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க, பட்ட மேற்படிப்பு முடித்த தேதியிலிருந்து கணக்கிடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் சிறப்பு மேற் படிப்பு இளம் வயதில் முடித்த மருத்துவர்கள் 20, 25 வருடங்கள் கழித்துதான் பதவி உயர்வு பெறுகின்றனர்.

அதே நேரத்தில் எம்.பி.பி.எஸ்., முடித்தவுடன் நேராக வரும்பொழுது அவர்கள் எம்.எஸ். அல்லது எம்.டி. அல்லது எம்.சி.எச். அல்லது டி.எம். படித்த ஐந்து ஆண்டுக்குள் பதவி உயர்வு பெறுகின்றார்கள். அப்பொழுது அந்தத் துறையில் சில நடைமுறைப் பிரச்சினைகள் இருப்பதால் அதற்கு முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவி உயர்வு என்று எடுக்கிறபோது அன்றைக்கு இருக்கின்ற மருத்துவர்களிலே யார் பணிமூப்புப் பட்டியலிலே மூத்தவராக இருக்கிறாரோ அவருக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. படிப்பு, அதாவது டிகிரி என்ற ஒரு அடிப்படைத் தகுதியை நாம் வைத்து இருக்கிறோம். அந்தத் தகுதிக்குள்ளே வந்திருக்கிற மருத்துவர்களுக்கு, பணிமூப்பைப் பார்த்து நாம் கொடுக்கிறோம். ஆனால், எந்தக் காலத்திலே அவர்கள் படிப்பு முடித்தார்கள், அவர்கள் ஸ்பெஷாலிட்டி எப்போது முடித்தார்கள் என்பதை கணக்கு வைத்து கொடுப்பது என்பது முடியாத காரியம். அப்படிக் கொடுத்தால் நிறைய டிஸ்கிரிமினேஷன் வரும் என்ற காரணத்தால் மொத்த சர்வீசை கணக்கிலே எடுத்துக்கொண்டு தான் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, இப்போது இருக்கிற முறை, முறையாக சரியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில மருத்துவர்கள் 32 வயதிற்குள்ளேயே டி.எம். அல்லது எம். சி.எச். முடித்துவிட்டு அவர்கள் 20,25 வருடங்கள் பதவி உயர்வு பெற முடியாமல் இருக்கின்றார்கள். அதே நேரத்தில் 45 வயது முடிந்தவர்கள், பெரிபரல் சைடிலிருந்து வந்து எம்.சி.எச். முடித்த ஐந்தாண்டுக்குள்ளேயே பதவி உயர்வு பெற்று அவர்கள் தலைமை மருத்துவர்களாக பதவி ஏற்கின்றார்கள். ஆகவே, இதை மாற்றும் பொருட்டு, டி.எஸ்.பி., டி.ஆர். ஒ. கேடரிலேயிருந்து ஐ.ஏ.எஸ்.—அல்லது ஐ.பி.எஸ்.ஸ்டேட் கேடர் மூலம் கொடுக்கின்றார்கள். அதே நேரத்தில் ஆல் இண்டியா சர்வீஸ் மூலமும் புரமோஷன் கொடுக்கின்றார்கள். அதிலே சில விகிதாசாரங்கள் இருக்கின்றன. அதேமாதிரி இதிலேயும் விகிதாசாரம் கொண்டு வந்து, ஏதாவது முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொடுக்க இயலாது. காரணம் ஒரு மருத்துவராக எம்.பி.பி.எஸ். முடித்தவுடனேயே அவர் ஒரு பணியிலே சேர்வதற்குத் தகுதி உடையவர். அப்படிப்பட்ட தகுதி

உடையவர் பதவி உயர்வுக்காக வருகிறபோது அவருடைய அன்றைய தகுதி என்னவோ அந்தக் கணக்கை வைத்துத்தான் நாம் பார்க்கிறோம். எனவே அப்படி சீனியாரிட்டி பிக்ஸ் பண்ணி செய்கிறபொழுது மொத்த சர்வீஸை வைத்துதான் பிக்ஸ் பண்ண முடியுமேயொழிய, அவர் எந்தக் காலத்திலே எந்த டிகிரியை முடித்தார், அதற்கும் இதற்கும் உள்ள இடைவெளி என்ன என்பதை கணக்கிட்டு அவர் படித்த அந்த உயர் படிப்பிற்காக சீனியாரிட்டியை நாம் பிக்ஸ் செய்ய முடியாது. சர்வீஸ்லே அவர் என்றைக்குச் சேர்ந்தார்; அதுவும் சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு ஜாயின் பண்ணிய தேதி என்ன என்ற அந்தக் கணக்கை வைத்துத்தான் இப்பொழுது நாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். எனவே அதிலே யாராவது சிலபேர் நேரடியாகப் படித்துவிட்டுவருகிற இளைஞர்களுக்குப் பிரச்சினை இருக்கலாம். ஆகவே இவர்களை வேறு வகையாகப் பாருங்கள். அவர்கள் படித்ததிலேயிருந்து கிராமங்களிலே பணியாற்றி அதற்குப் பின்னாலே வந்து இங்கே டிகிரியைப் பெற்று அவர்கள் வருகிறபொழுது, அவர்கள் பணியாற்றிய அந்தக் காலத்திற்கு நாம் மரியாதை கொடுக்க வேண்டும். எனவே அந்த பதவி உயர்வு பெறுகிற அந்த நேரத்திலே யார் யாருக்குக் கல்வித் தகுதி இருக்கிறதோ—அதேபோல டீச்சிங் எக்ஸ்பீரியன்ஸ் 4 ஆண்டுக்காலம் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. எனவே, அந்தத் தகுதிக்கு உட்பட்டிருந்தால் அதிலே யார் யார் வருகிறார்களோ அந்தப் பட்டியலிலே மூத்தவராக மொத்த சர்வீஸ்லே மூத்தவராக யார் இருக்கிறாரோ. அதிலேயிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்படும். எனவே, அந்த முறை சிறப்பாக இருக்கிறது என்றே நாங்கள் கருதுகிறோம்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, மருத்துவத்தைப் பொறுத்தமட்டில் டாக்டர்கள் இரண்டு விதமாகத்தான் இருக்கிறார்கள். ஒன்று அசிஸ்டன்ட் சிவில் சர்ஜன்; மற்றொன்று சிவில் சர்ஜன். அசிஸ்டன்ட் சிவில் சர்ஜனிலிருந்து சிவில் சர்ஜனாகப் பதவி உயர்த்தப்படும்பொழுது சர்வீசை மட்டும கணக்கில் எடுத்து போடுகிறார்களா? அல்லது, எஜுகேஷனல் குவாலிபிகேஷன் மட்டும் வைத்து எடுக்கிறார்களா? அல்லது சர்வீஸ் ப்ளஸ் எஜுகேஷனல் குவாலிபிகேஷன் ஆகிய இரண்டையும் சேர்த்து பதவி உயர்வு கொடுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே சிவில் அசிஸ்டன்ட் சர்ஜனிலேயிருந்து சிவில் சர்ஜனாக வருகிற பொழுது இரண்டு முறைகள் இருக்கின்றன. ஒன்று, ஸ்பெஷாலிட்டி; இன்னொன்று, ஜெனரல் லைன். ஜெனரல் லைன் என்பது எம்.பி.பி.எஸ்., இருந்தாலே போதும், எனவே அவர்கள் ஜெனரல் லைனிலே வருகின்ற பொழுது அவர்கள் வெளியிலே இருக்கிற மருத்துவமனைகளிலே பணியாற்றுவார்கள். ஆனால் ஸ்பெஷாலிட்டியைப் பொறுத்தவரை டீச்சிஞ்ங் ஹாஸ்பிடலிலே அவர்கள் இருப்பார்கள், எனவே, அந்த ஸ்பெஷாலிட்டியைப் பொறுத்தவரையில் டீச்சிங் ஹாஸ்பிடலிலேயும் இருப்பார்கள். வெளியிலேயும் இருப்பார்கள். எனவே, இதிலே வருகிறபோழுது எஜுகேஷன் ப்ளஸ் சர்வீஸ் இது இரண்டும் பார்க்கப்படுகிறது. ஜெனரல் லைனிலே வருகிறபோழுது சர்வீஸ் மட்டும் பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற அட்மினிஸ்ட்ரேட்டிவ் லைனிலே வருகின்றதைப்போல, ''இன்டியன் மெடிகல் சர்வீஸ்'' ஐ.எம்.எஸ்., என்ற திட்டத்தை நம்முடைய மருத்துவத்துறையில் ஏற்படுத்தினால், இந்த அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடு ஒரு பாகமாகவும், அகடமிக்கிலே படிக்கக்கூடிய அதிகாரிகள் ஒரு பாகமாகவும் செய்தால் இந்த புரமோஷனுடைய நிலைமைகள் சரியாக அமைக்கப்படும். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆராய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யோசனை—ஏற்கனவே இதைப் பற்றிப் பரிசீலிக்கப்பட்டது. காரணம், அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடிலே யாரும் வருவதற்கு அதிகமாக விருப்பம் தெரிவிப்பது இல்லை. அப்படியே வந்தாலும் கூட, அவர்கள் அதிலே மிகுந்த அனுபவம் இல்லாதிருக்கிற காரணத்தால்தான் இந்தத் துறையிலேகூட மிகப்பெரிய சிக்கல்களையெல்லாம் நாம் சந்தித்துக் கொண்டிக்கிறோம். காரணம், அவர்கள் மூத்த மருத்துவர்களாக வருகிறவரை எங்கேயாவது ஓரிடத்திலே அவர்கள் மருத்துவத் தொழிலை மட்டுமே பார்த்துக் கொண்டிக்கிறார்கள். அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடிலே அவர்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் இருப்பது இல்லை. ஆனால் அதற்காகப் பதவி உயர்வு கொடுக்கிற பொழுது இதிலே சீனியாரிட்டி அடிப்படையிலே நாம் கொடுத்து விடுகிறோம். அப்படிக் கொடுக்கிற காரணத்தால் அந்த அட்மினிஸ்ட்ரேட்டிவ் போஸ்ட்டுக்கு வரக் கூடியவர்களுக்கு தேவையான அனுபவம்

1993 அக்டோபர் 27] [திரு. சு. முத்துசாமி]

இல்லாத காரணத்தால் அவர்கள் வந்து பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அந்தக் காரணத்தால்தான் பலபேர் அதற்கு வரவே கூட மறுக்கிறார்கள். இதற்காக அட்மினிஸ்ட்ரேட்டிவ் விங் என்று ஒன்று தனியாகத் துவங்கவேண்டுமென்று நாங்கள் கருதினோம். ஆனால், அதிலேயும் இன்னொரு சிக்கல் என்னவென்று சொன்னால் அதிலே நிறைய பேர் வருவதற்கு ஆர்வம் இல்லாதிருக்கிற காரணத்தால் இளைஞர்களாக அதிலே வந்து விடுவார்கள். எனவே இளைஞர்களாக வந்து ஒரு டினாகவோ, ஒரு டி.எம்.இ.—ஆகவோ வருகிறபொழுது மிக அதிகமான சர்வீஸ் உள்ளவர்களை அவர்கள் கட்டுப்படுத்துவது என்பது அந்த நடைமுறையிலேயே சிக்கல்கள் ஏற்படும். எனவே, இவையெல்லாம் பார்த்துத்தான், இருப்பது அப்படியே இருக்கட்டும் என்று நாங்கள் விட்டுவிடுகிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், இதைப்பற்றி ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். இப்பொழுது, ஏற்கனவே இருக்கக்கூடியவர்களிலே ஒரு குறிப்பிட்ட ஆண்டு சர்வீஸ் போட்ட பின்னாலே அவர்கள் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடுக்கு வருவது என்று அவர்கள் விருப்பம் தெரிவித்தால் அவர்களைக் கொண்டுவந்து அதற்காகத் தனி டிரெயினிங் கொடுக்கலாமா என்று ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய அரசு அமைந்த பின்னாலே, ஆரம்பத்திலேயே மருத்துவர்களை ரெக்ரூட் செய்கிற ஸ்டேஜிலேயே கொஞ்சம் கொஞ்சம் எடுத்து ஒரு ஐநூறு ஐநூறு பேராக எடுத்து அவர்களுக்கு டிரெயினிங் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இப்பொழுது அது நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இது ஓரளவுக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் படிப்பு படித்து, இப்பொழுது டீச்சிங் லைனிலே இருக்கக் கூடியவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும் கூட, அவர்கள் வெளிநாடுகளுக்குப் போவதற்காவது வாய்ப்பு கொடுத்து மத்திய அரசாங்கம் அவர்களுக்கு செலக்ட் செய்து கொடுக்கக்கூடிய கட்டத்தில், * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதாவது தனிப்பட்ட ஒருவருக்காக இந்தக் கேள்வி நேரத்தையெல்லாம் பயன்படுத்தக் கூடாது. அதற்குத் தனிக் கேள்விப் போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இது பதவி உயர்வு பற்றியது. வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றிய பிரச்சினை இதில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை எடுத்து விடுகிறீர்களா? இருந்தது என்றால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 25, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கேட்பார்கள்.

25—

அரசு மருத்துவமனைகளில் நவீன கருவிகளை நிறுவ, பழுது பார்க்க, பராமரிக்க தனி அமைப்பு

*10074 திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு மக்கள், நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் நவீன கருவிகள் நிறுவவும், பழுதுபார்க்கவும், பராமரிக்கவும் ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கருவிகளைப் பராமரிப்பதற்காக ஏற்கனவே உள்ள அமைப்புக்களின் பணிகளை ஒருங்கிணைத்து இப்பணியை மாநிலம் முழுவதும் பரவலாக்கும் வகையில் ஒரு தனி அமைப்பை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு மருத்துவமனைகளைக் காட்டிலும் தனியார் மருத்துவமனைகளில் எல்லாவிதமான கருவிகளும் — ஆப்பரேஷன் கருவிகள், மற்ற எல்லாக் கருவிகளும்—அங்கே நிறைந்து இருப்பதாகச் சொல்கிறார்களே, ஆனால், நம்முடைய அரசு மருத்துவமனைகளில் நாம் நினைக்கக் கூடிய, டாக்டர்கள் எந்தக் கருவி வேண்டுமென்று சொல்